*Name of the NEWSPAPER:* **Kumari Kural** *DATE:* **1st March, 2022**

*Name of the institution:* **Holy Cross College (Autonomous), Nagercoil**

# குமரி குரல்

**KUMARI KURAL**

## திருச்சிலுவை கல்லூரி சார்பில் உன்னத் பாரத் அபியான் திட்ட சிறப்பு முகாம்

நாகர்கோவில் திருச்சிலுவை கல்லூரி சார்பில் உன்னத் பாரத் அபியான் திட்ட சிறப்பு முகாம் கல்லூரியால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து கிராமங்களில் நடந்தது. கோவில்விளை, காட்டுவிளை, அன்னை நகர் ,பொழிக்கரை ஆகிய கிராமங்களில் பழச்சாறு தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல், பாத்திரம் கழுவும் பவுடர் மற்றும் திரவம், திடக் கழிவு மேலாண்மை பற்றிய பயிற்சி கிராம மக்களுக்கு கொடுக்கப்பட்டது. மணக்குடி கிராமத்தில் தூய்மை பணி நடந்தது. கோவில்விளை கிராமத்தில் மழைநீர் சேகரித்தல் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. அன்னை நகர், பொழிக்கரை, மணக்குடி ஆகிய இடங்களில் சலவை பவுடர் மற்றும் திரவம், பினாயில் தயாரித்தல், மெழுகுவர்த்தி செய்தல், பூந்தொட்டி தயாரித்தல், இயற்கை உரம் தயாரித்தல் பற்றிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. மேலும் மணக்குடி கிராமத்தில் செடி வளர்ப்பதற்கான பைகளும், விதைகளும் ஊர்மக்களுக்கு கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வை கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் திட்ட பொறுப்பு பேராசிரியர்களான பனிமய மெர்சி, ஜான்சி வினி, பிரபீனா, புனிதா, பவானி, சிறுமலர் ராஜம், சார்லஸ் டயானா, தேவ விஜிலா, விர்ஜின் ஜெபா, ஜாஸ்மின் வினோஜா, சந்தியா, ஜெனிலா, பிரகாஷ் சோபா, பேபி மற்றும் கல்லூரியின் முதுநிலை மாணவிகளால் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது.



उन्नत भारत अभियान
UNNAT BHARAT ABHIYAN